தொழில் நுட்ப தகவல் பிரசுரம்

கம நுட்பம்

விவசாயத் திணைக்களத்தின் வெளியீடு
விவசாய அபிவிருத்தி அமைச்சு

மலர் 8 இதழ் 4 ஜுலை - ஆகஸ்ட் 2006

இவ்விதழில்

- புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட பயிர் வர்க்கங்கள்
- பயிர் உற்பத்திச் செலவு 2004/05 காலபோகம்
- போஞ்சிக்கு தடிகள் அவசியமில்லை
- வாழைப் பழங்களின் சதை கபில நிறமாதல்

ஆசிரியர்
ஜயன்தா இளங்கோன்
தமிழில்
பெரியசாமி
விவசாய, பயிற்சிப் பிரிவு
த.பெ.18, பேராதனை.

புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட பயிர் வர்க்கங்கள்

2006 ஜுலை 15 அன்று விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையின் கீழ் இடம் பெற்ற பயிர் வர்க்கங்களை சிபாரிசு செய்யும் தேசிய குழுக் கூட்டத்தில் சீனி வாழை, பாகல், காளான், 3 1/2 மாத நெல் ஆகியவற்றின் புதிய வர்க்கங்கள் பயிர்ச்செய்கைக்காக சிபாரிசு செய்யப்பட்டன.

சீனி வாழை வர்க்கம் - பெரகும்

இலங்கையில் சீனி வாழைக்கு அதிக கிராக்கி நிலவுகின்றது. இது நோயாளிகளிற்கும், குழந்தைகளிற்கும், விசேடமாக முதியோரிற்கும் உகந்த ஒரு பழமாகக் கருதப்படுகின்றது. சீனி வாழையில் செய்கைபண்ணப்படும் பல்வேறு உள்ளூர் வர்க்கங்கள் உள்ளன. இவை விவசாயிகளினால் பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. இறப்பர் வாழை, வெள்ளை கதலி, வெள்ளை சீனி, வத்து பாலு, தேன் வாழை என்பன இவற்றுட் சிலவாகும். தீவில் செய்கை பண்ணப்படும் சில வர்க்கங்களில் விதைகள் காணப்படுவதோடு, அவை பழுப்பு நிறமானதாயும் காணப்படுகின்றன. எனவே விதைகள் அற்ற உயர்தரமான, அதிக விளைச்சலைத் தரும் ஒரு வர்க்கம் " பெரகும் " என்னும் பெயரில் தீவெங்கிலும் செய்கைபண்ணுவதற்கென சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இது காலி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தெரிவாகும்.

ஏறத்தாழ 108 நாட்களில் முதிர்ச்சியடையும் குலையொன்றில் 10 சீப்புகள் காணப்படுவதோடு, அதன் சராசரி நிறை 15.9 கிலோ கிராம் ஆகும். பழமொன்றின் சராசரி நிறை 120 கிராம் ஆகும். 15.8 ச.மீ நீளமானது ஆராய்ச்சி நிலைமைகளின் கீழ் ஏக்கரொன்றிலிருந்து 47.7 மெற்றிக் தொன் விளைச்சலைப் பெறலாம்.

இதன் தோல் மஞ்சள் நிறமானதோடு, சதையும் மஞ்சள் நிறமாகவேக் காணப்படும். இதன் பிறிக்ஸ் பெறுமானம் 25 ஆகும்.

இவ்வர்க்கம் அங்குணகொலபெலஸ்ஸவில் அமைந்துள்ள அவரை, எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்டதாகும்.

வர்க்கத்தை விருத்தி செய்தவர்: கலாநிதி சுஜாதா வீரசிங்க
ஆராய்ச்சி அலுவலர்

பொத்தான் காளான்- கஜமுத்து

பாகல் - மாத்தளை கிறீன்

“வயலிற்கு விடியல் ” விவசாய அணுகுமுறையின் ஊடாக புதியதொரு இலங்கையைப் படைப்போம்

பொத்தான் காளான்Button Mushroom *(Agaricus bisporus L)*

வர்க்கம் : கஜமுத்து

இன்று உலகில் அதிகளவான கிராக்கி நிலவும் காளான் வகை *Agaricus bisporus L* ஆகும். இவ்வகையான காளான் வெப்ப வலய நாடுகளிலும், குளிரான காலநிலையைக் கொண்ட அயன மண்டல நாடுகளிலும் பயிரிடப்படுகின்றது. இதனைப் பயிரிடுவதற்கு 16-20 பாகை செ.கி வெப்பநிலை அவசியமாகும். இலங்கையின் மலைநாட்டில் சில பிரதேசங்களில் இவ் வகையான காளானைச் செய்கை பண்ணலாம். எனினும், செயற் கையான நிலைமையை வழங்குவதன் மூலம் தீவின் ஏனைய பகுதிகளிலும் இதனைச் செய்கைபண்ணலாம். வளர்ப்பு ஊடகத்தை ஆயத்தம் செய்வதற்கான தொழில்நுட்பங்களை பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் விருத்தி செய்துள்ளது.

பொத்தான் காளான் வர்க்கமொன்று இதுவரை சிபாரிசு செய்யப்படவில்லை. எனவே இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பல வர்க்கங்கள் இசைவாக்கப் பரிசோதனையொன்றில் பரிசோதிக்கப்பட்டன. இவற்றில் சிறந்த முடிவுகளைக் காட்டிய வர்க்கம் கஜமுத்து என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இதன் அத்திவார வித்திகள் கண்ணொறுவை பூங்கனியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பயிர்ச்செய்கை ஊடகமாக வைக்கோல் உலர்ந்த புற்கள், குதிரை எரு போன்றவற்றைப் பயன்படுத்தலாம். வளர்ப்பூடகத்தின் நிறையில் 10-15% வரை விளைச்சலாகப் பெறலாம்.

வர்க்க அபிவிருத்தி : ஸ்ரீமதி உடுகம, ஆராய்ச்சி அலுவலர்

பாகல் - மாத்தளை கிறீன்

பச்சை நிறமான பாகற் காய்களிற்கு சிறந்த கிராக்கி நிலவுகின்றது. எனவே, பச்சை நிறமான பாகல் வர்க்கமொன்று " மாத்தளை கிறீன் " என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. மாத்தளை பிரதேசத்தில் விவசாயிகளின் தோட்டங்களில் பெறப்பட்ட விதைகளை தூய்மைப்படுத்தி இவ் வர்க்கம் பெறப்பட்டது. 20-30 ச.மீ நீளமான காயொன்றின் நிறை 150-200 கிராம் ஆகும். காய்கள் பச்சை முதல் கடும் பச்சை நிறம் வரை வேறுபடும். காய்களின் மேற்பரப்பில் 8-9 வரையான நீட்டங்கள் தொடர்ச்சியாகக் காணப்படும். இவ் வர்க்கம் ஹெக்டயரொன்றில் 15 தொன் விலைச்சலைத் தரவல்லது.

வர்க்க அபிவிருத்தி :
என்.பரராஜசிங்கம், ஆரா. அலுவலர்

நெல் வர்க்கம் - பீ. டபிள்யு 364

ஈரவலயத்தில் செய்கைபண்ணுவதற்கென 3 1/2 மாத, மத்திய அளவு நீளமான மணிகளைக் கொண்ட, சிவப்பரிசி வர்க்க மொன்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இரும்பு நச்சுத்தன்மையை நன்கு சகித்து வளரும். கொப்புள ஈ, கபில நிறத் தத்தி என்பனவற்றிற்கு போதியளவான எதிர்ப்புத் தன்மையைக் கொண்டுள்ளது. எரிபந்தம், மடல் வெளிறல், கழுத்தழுகல் பக்றீரியா இலை வெளிறல் என்பனவற்றையும் ஓரளவு எதிர்த்து வளரும். இவ்வர்க்கம் 5-6 மட்டங்களைக் கொண்ட, கட்டை வடிவிலான மத்தியளவான உயரத்தைக் கொண்ட தாவர வடிவமைப்பைக் கொண்டது. இதனால் இத்தாவரம் சாய்ந்து விழாது.

103-105 நாட்களிற்கிடையில் முதிர்ச்சியடையும். இச் சந்ர்ப்பத்தில் கொடி இலையும், அதற்கு அண்மையிலுள்ள 2-3 இலைகளும் பச்சை நிறமாகவேக் காணப்படும். இவ்விலைகள் கபில நிறமாகும் வரை அறுவடையைப் பிந்தி மேற்கொள்ளும் போது கதிரிலிருந்து மணிகள் உதிரத் தொடங்கும். குற்றும் போது அரிசியாகும் அளவு, சோற்றின் தரம், பாவனையாளர்களின் விருப்பு என்பன உயர்ந்த அளவிலேயேக் காணப்பட்டது.

இவ்வர்க்கம் ஹெக்டயரொன்றில் 7-8 தொன் விளைச்சலைத் தரவல்லது. இரும்பு நச்சுத் தன்மை கொண்ட வயல்களில் இதனை செய்கைபண்ணும் போது உயர் விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வர்க்க அபிவிருத்தி : கலாநிதி அமிதா பென்தொட்டை
ஆராய்ச்சி அலுவலர்

பயிர் உற்பத்திச் செலவு - 2004/05 காலபோகம்(Cost of Coltivation)

விவசாயத் திணைக்களத்தின் சமூகப் பொருளாதார திட்டமிடல் நிலையத்தினால் சிறுபோகம், காலபோகம் ஆகியனவற்றின் இறுதியில் பயிர் உற்பத்திச் செலவு தொடர்பாகத் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட " Cost of Cultivation 2004 / 05 Maha" என்னும் பிரசுரம் வெளியிட்டுள்ளது. இதனை அந் நிலையத்திலும், பேராதனையிலுள்ள விவசாயத் தகவல் நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்

இலங்கையின் பிரதான விவசாயப் பயிர்களான நெல், சோளம், வெங்காயம், கிழங்கு வகைகள், மலைநாட்டு, தாழ்நாட்டு மரக்கறிகள் என்பனவற்றின் உற்பத்திச் செலவுகள், வருமானம் என்பனவற்றின் பகுப்பாய்வுத் தகவல்கள் இப் பிரசுரத்தில் தரப்பட்டுள்ளன.

விசாரணைகளிற்கு: உதவி விவசாயப் பணிப்பாளர்
தகவல் நிலையம்
த.பெ.இல 30, பேராதனை.
தொ.பே.இல: 081-2388123
http://www.agridept.gov.lk என்னும் இணையத் தளத்திலும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

போஞ்சிக்கு தடிகள் அவசியமில்லை

போஞ்சிக் கொடி படருவதற்கு தடி அவசியமாகும். சிறந்த தடிகள் இருக்குமாயின் கொடிகள் நன்கு படர்ந்து வளர் வதனால் அதிக விளைச்சலைப் பெறலாம். ஆனால் போஞ்சியை பெருமளவு பரப்பில் செய்கைபண்ணும் போது சிறந்த தடிகளைப் பெற்றுக் கொள்வது பெரும் சிரமமானதாகும். ஒரு ஏக்கரில் போஞ்சியை செய்கைபண்ணும் போது கிட்டத்தட்ட 22,000 தடிகள் வரை தேவைப்படும். பலாங்கொடை போன்ற பிரதேசங்களில் ஒரு போகத்தில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் போஞ்சி பயிரிடப்படுகின்றது . எனவே ஒரு போகத்திற்குக் கிட்டத்தட்ட 10 மில்லியன் தடிகள் வரை தேவைப்படும். இவையனைத்தும் அருகிலுள்ள காடுகளிலிருந்தும், தோட்டங்களிலிருந்துமே பெறப்படுகின்றன. இந்நிலை பலாங்கொடை பிரதேசத்திற்கு மாத்திரமல்லாது ஏனைய பிர தேசங்களிற்கும் பொதுவானதொன்றாகும். இவ்வாறான பிரச்சினைகளின் காரணமாக சுற்றாடல் அதிகளவில் பாதிக்கப்படுகின்றது. எனவே இந்நிலையைத் தவிர்ப்பதற்கு பலாங்கொடை பிரதேசத்தில் விவசாயத் திணைக்களத்தின் பங்களிப்புடன் போஞ்சி பயிர்ச்செய்கையில் தடி களிற்குப் பதிலாக வலைகளில் கொடியைப் படரவிடும் முறையொன்று அறிமுகப்ப டுத்தப்பட்டு விவசாயிகளால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மூன்று அல்லது நான்கு வருடங்களிற்கு முன்னர் நாற்கா லிகளைப் பின்னுவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'சிந்தா கொடி' இதற்குப் பயன்படு த்தப்பட்டது. இதன் பின்னர் பொலிபுரொபலின் பையின் நூல் பயன்படு த்தப்பட்டது. ஆனால் இவற்றையும் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கினர். ஆனால் தற்போது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விவசாயிகள் படங்கு சாக்கின் நூலை (சனல்) பயன்படுத்துகின்றனர். இவற்றை சந்தையில் இலகுவாகப் பெறக்கூடியதாயும் உள்ளது. ஒரு ஏக்கரில் போஞ்சியை பயிரிடும் போது 30 கிலோகிராம் சனல் போதுமானதாகும்.

பாத்திகளிற்கு மேல் நீள் பக்கமாக பைண்டிங் கம்பியொன்று இழுத்துக் கட்டப்படுகின்றது. இந்த கம்பி உறுதியாக நிலைத்திரு ப்பதற்கு வசதியாக 5 மீற்றர் இடைவெளியில் தடிகள் ஊன்றப்பட்டு அவற்றின் மீது கம்பிகள் இறுக்கமாகக் கட்டப்படுகின்றன. இதன் பின்னர் போஞ்சி செடியின் அருகே சிறிய மரத் தடியொன்றை (கூனித் தடி) நடுகின்றனர். இத்தடியில் சனல் நூலை இறுக்கமாகக் கட்டி அதனை இழுத்து கம்பியின் மீது சுற்றி, மீண்டும் அடுத்த பக்கமாக உள்ள போஞ்சி செடியின்அருகே நடப்பட்டுள்ள தடியில்இறுக்கமாக இணைத்துக் கட்டி விடுகின்றனர். இதனைப் பார்க்கும் போது அது (தலை கீழ் V) வடிவானதாகக் காணப்படும். இதனால் போஞ்சிக் கொடி முதலில் நூலைச் சுற்றி படர்ந்து அதன் பின்னர் கம்பியில் படரத் தொடங்கும் கம்பியை இறுக்கமாகக் கட்டுவதனால் அது அச் சந்தர்ப்பத்திலும் கீழே முறிந்து விழுவதில்லை.

படங்கு சாக்கு நூல் (சனல்)

போஞ்சியை செய்கைபண்ணும் போது தடிகளிற்குப் பதிலாக நூலைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதோடு பல்வேறு நன்மைகளையும் விவசாயிகள் அடையலாம்.

நன்மைகள்

- தடிகளைப் பெறுவதற்கு பெருமளவில் காடுகள் அழிக்கப்ப டுகின்றன. ஆனால் இம்முறையின் தடிகளின் பாவனை பெருமளவில் குறைவதனால் வனங்கள் பாதுகாக்கப்படுகின்றன.
- உற்பத்திச் செலவு குறையும்,
- போஞ்சியை செய்கைபண்ணும் போது வழமையான முறையில் (அதாவது தடியை ஊன்றி செய்கைபண்ணும் போது) ஒரு பாத்தியில் மூன்று விதைகள் வீதம் நடப்படும். இதனால் மத்தியில் குறைந்தளவான சூரியவெளிச்சமே விழுவதன் காரணமாக விளைச்சல் குறைவதைக் காணக்கூடியதாய் உள்ளது. ஆனால் இம்முறையில் ஒரு பாத்தியில் இரண்டு விதைகள் மாத்திரமே நடப்படுவதனால் எல்லா கொடிகளிற்கும் நன்கு சூரிய வெளிச்சம் கிடைக்கும். இதனால் விளைச்சல் அதிகரிக்கும். தடிகளைப் பயன்படுத்தி செய்கைபண்ணப்படும் ஒரு ஏக்கர் போஞ்சி செய்கையிலிருந்து 5000-6000 கிலோவை விளைச்சலாகப் பெறலாம். ஆனால் புதிய முறையில் சணலையும், கம்பிகளையும் பயன்படுத்தி வலைகளை அமைத்து செய்கைபண்ணும் போது 7000-8000 கிலோ வரை விளைச்சலாகப் பெறலாம்.
- தடிகளை ஊன்றி செய்கைபண்ணும் போது காற்று கடுமையாக வீசும் காலப் பகுதியில் தடிகள் வேருடன் பிடுங்கி வீசப்படலாம். ஆனால் இவ்வாறு பந்தல் அமைத்து செய்கைபண்ணும் போது இவ்வாறு வீசப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு, எனவே காற்று வீசும் காலப் பகுதியிலும் போஞ்சியை எவரும் செய்கை பண்ணலாம். இதனைத் தவிர காற்று வீசும் காலப்பகுதியில் தடியை விட விரைவாக சணலில் கொடிகள் படருவதாக ஆய்வுகளின் முடிவுகள் தெரிவித்துள்ளன.
- தடிகளை ஊன்றி பயிர் செய்யும் தோட்டத்தில் அதிகளவான பதிய வளர்ச்சி ஏற்படும் இதனால் சூரிய வெளிச்சத்திற்கு அதிகளவான போட்டியேற்பட்டு விளைச்சல் குறையும், ஆனால் சணலில் படர விடும் போது உகந்த அளவான இலைகள் மாத்திரமே உருவாகும். எனவே விளைச்சலில் எவ்விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை.
- வலையில் படர விடும் போது இலகுவாக இரசாயனங்களை விசிறலாம். இதனால் நோய்களை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்.
- அறுவடை செய்யும் போது பாத்தியின் மேல் நடந்து செல்ல வேண்டும். அத்துடன் இதற்கு அதிக செலவேற்படும். ஆனால் இப்புதிய முறையில் இதற்கான செலவினைக் குறைக்கலாம்.

இவ்வாறு பல நன்மைகள் உள்ள போதிலும், ஒரு பிரதிகூலம் இல்லாமலில்லை. அதாவது இம்முறையில் ஒரு பாத்தியில் இரண்டு விதைகள் வீதம் நடும் போது அகலம் குறைந்த பாத்திகளையே அமைத்தல் வேண்டும். இதனால் அதிக பாத்திகளை அமைத்தல் வேண்டும். இதனால் பாத்திகளை அமைப்பதற்கு அதிகளவான கூலியாட் செலவு ஏற்படும்.

எஸ்.எம்.சீ.பீ. சிறிவர்தன,
விவசாய கண்காணிப்பு அலுவலர், தமஹன கமநல சேவைகள் நிலையம், பலாங்கொடை.

வாழைப் பழங்களின் சதைகள் கபில நிறமாதல்

மகாவலி 'சி' வலயத்தில் வாழைப் பழங்களின் சதைகள் கபில நிறமாக மாறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழத்தின் நுனியில் ஆரம்பித்து கடத்தும் இழையங்களின் ஊடாக, காம்பினை நோக்கி கபில நிறம் பரவும். இவ்வாறான காய்களின் குறுக்கு வெட்டு முகத்தில் மூன்று இதழ்களைக் கொண்ட பூக்கள் போன்று தோற்றமளிக்கும் (படம் 1).

இந்த அறிகுறி படிப்படியாக சதையின் வெளிப்புற எல்லை வரை பரவும். பாதிக்கப்பட்ட பழமொன்றின் தோலை உரிக்கும் போது, ஒழுங்கற்ற முறையில் கபில நிறமாகி இருப்பதைக் காணலாம். (படம் 2). இவ்வாறு கபில நிறமாக மாறிய சதைப் பகுதி கடினமடைந்து காணப்படும். இந்நிலைமை மோசமடையும் போது இந் நிறமாற்றத்தை பழங்களின் வெளிப்புறத்திலும் அவதானிக்கலாம். ஒழுங்கற்ற முறையில் நிரம்பிய அப் பழங்களின் நுனிப்பகுதியில் நீட்டம் போன்று தோற்றமளிக்கும். (படம் 3).



படம் 1

படம் 2

படம் 3

குலையில் மேற்புறமாகக் காணப்படும். சீப்புகள் இதனால் இலகுவாகப் பாதிக்கப்படுவதோடு, கீழேயுள்ள சீப்புகளில் எவ்விதமான பாதிப்புகளும் காணப்படுவதில்லை.

இந்த அசாதாரண நிலையை பழமாக உண்ணப்படும் கதலி (புளி வாழை) (AAB), கோழிக் கூட்டு (AAB) ஆகியனவற்றில் மாத்திரமே அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இதற்கான காரணம் தெளிவாக அறியப்படவில்லை. எனவே இது ஒரு உடற்றொழிலியல் நோயாகவே கருதப்படுகின்றது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குலை தள்ளும் போதும், காய்கள் உருவாகும் சந்தர்ப்பத்திலும் அதிக வெப்பநிலையுடன், நீர்ப்பற்றாகுறைவு ஏற்படுமாயின் இந்நிலை தோன்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பற்றாக்குறைவினால் ஏற்படும் தகைப்பிற்கும், கபில நிறமாவதற்கும் தொடர்புகள் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை உலர் வலயத்தில் பொலன்னறுவை, அநுராதபுரம், உடவளவை போன்ற பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. குறைவர்ன மழைவீழ்ச்சி, உயர்ந்தளவான வெப்பநிலை என்பவற்றைக் கொண்ட சிறுபோகத்தில் இந்நிலையை அதிகளவில் அவதானிக்கலாம்.

இதற்கான காரணம் அல்லது உகந்த நிலை என்பன தொடர்பாக விவசாயிகள் அறிந்திராமையால் கட்டுப்படுத்துவது சிரமமானதாக உள்ளதோடு, வாழைக் குலைகளை சந்தையில் விற்பனை செய்ய முடியாமலும் உள்ளது.

வாழையைச் செய்கைபண்ணுவதற்கு உகந்த வெப்ப நிலை வீச்சு 27° - 30° C ஆகும். ஆனால் வாழை செய்கைபண்ணப்படும் உலர் வலயத்தின் வெப்பநிலை இதனை விட அதிகமாகும். மஹவலி B வலயத்தில் உலர் காலப்பகுதியில் வெப்பநிலை 36° C ஐ விட அதிகமானதாகும்.

காய்களின் நிறையை அதிகரிக்கவும், அவற்றின் தரத்தை மேம்படுத்தவும் வாழைக் குலைகளிற்கு உறையிடல் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், பொலிதீன் பைகளைப் பயன்படுத்தி வாழைக் குலைகளிற்கு உறையிடும் போது குலையின் உள்ளே நுண் சுற்றாடலின் வெப்பநிலை உயரும். இதனால் சதைகள் கபில நிறமாகுவதும், சதை கடினமடைவதும் தூண்டப்படுகின்றது. பொலிசெக் பைகளைப் பயன்படுத்தும் போது நுண் சுற்றாடலின் வெப்பநிலையை குறைவான மட்டத்திலேயே பராமரிக்கலாம். விவசாயிகளிற்கு அறிவூட்டுவதன் மூலம் பொலிசெக் பைகளினால் உறையிடுவதைத் தூண்டலாம்.

மகாவலி வலயத்தில் காலபோகத்தில் நெல்லை அறுவடை செய்த பின்னர், சிறு போகத்தில் நெற்செய்கையை ஆரம்பிக்கும் வரை நீர்ப்பாசனம் செய்யப்படுவதில்லை. முழுமையாக நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கைபண்ணப்படும் வாழைப் பயிர்கள் இக்காலப் பகுதியில் நீர்ப்பற்றாக் குறைவினால் பாதிக்கப்படும். எனவே இக்காலப் பகுதியில் உருவாகும் வாழைக் குலைகளில் இவ்வாறான நிலை, அதாவது கபில நிறமாதல் ஏற்படும்.

மஹாவலி B வலயத்தில் பரவலாகக் காணப்படும் மண் வகையான கல்சியமல்லாத கபில மண்ணில் நீர் குறைவாகவேப் பிடித்து வைத்திருக்கப்படும். இந்த வலயத்தில் வாழைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும்பாலும் பத்திரக் கலவை இடுவதில்லை.

விசேடமாக குலை தள்ளும் பருவத்தில் உயர் வெப்பநிலை நிலவும் போது நீர்ப்பற்றாக் குறைவு ஏற்படாமலிருப்பதை உறுதி செய்வதன் மூலம் இந் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வது உகந்ததாகும்.

வைக்கோல், தென்னந் தும்பு, தென்னவோலை போன்ற சேதன பத்திரக் கலவைகள் மண்ணிலுள்ள ஈரப்பதனைப் பாதுகாப்பதோடு, மண்ணில் குளிரான நிலைமையையும் ஏற்படுத்தும். குலைகளிற்கு உறையிடுவதற்கு பொலிசெக் பைகளைப் பயன்படுத்தவும்.

ஆதாரம் : டபிள்யு.ஏ.ஆர்.ரி.விக்கிரம ஆரச்சி
பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், அரலகன்விலை.